# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2405/15 - 2024 ඔක්තෝබර් මස 08 වැනි අඟහරුවාදා - 2024.10.08

*2405/15 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அஞ்சல் அலுவலக சட்டமூலத்தின் (190 ஆவது அதிகாரம்) 45 ஆவது அத்தியாயத்தின் கீழ் தயாரிக்கப்படும் விதிகள்**

*2021.01.01 ஆந் திகதியிலிருந்து 2021.12.31 ஆந் திகதி வரை வெளியிடப்பட்ட காசுக் கட்டளைகள்*

காசுக்கட்டளைகள் அது வழங்கப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து ஆறு மாத கால வரையறைக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஆனால் காலாவதியான காசுக்கட்டளையின் விசேட நிலைமையைக் கவனத்தில் கொண்டு அது வழங்கப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்கள் வரை பணம் செலுத்துதல் பற்றிக் கவனத்தில் கொள்ளப்படுகிறது. இருந்தபோதிலும் வழங்கப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்களுக்கு அதிகமான காசுக் கட்டளைகளை மீண்டும் செல்லுபடியாகுவதற்கு அல்லது அதன் பெறுமதியை மீளச் செலுத்துவதற்கு முடியாதுள்ளது மற்றும் அந்தக் காசுக் கட்டளைகளின் பெறுமதியானது அரசின் வருமானத்துக்கு வரவு வைக்கப்படுகிறது.

2. அவ்வாறாயினும் பின்வரும் விசேட சந்தர்ப்பங்களின் கீழ், இரண்டு ஆண்டுகளுக்கு மேலான காசுக் கட்டளைகளின் பெறுமதி, உரிய கட்டணங்களை அறவிடப்பட்டதன் பின், அரச வருவாயிலிருந்து மீளச் செலுத்துதல் பற்றிக் கவனத்தில் கொள்ள முடியும்:

I. காசுக் கட்டளை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்திருத்தல் ;
II. சட்ட ரீதியான காரணத்துக்கு வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை மூலம் காசுக் கட்டளை நிறுத்தி வைத்திருத்தல் ;
III. காசுக் கட்டளையின் பணம் பெறுநர் வெளிநாடு சென்றிருத்தல் (கடவுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.);
IV. பணத்தைப் பெற இருப்பவர் நீண்ட நாட்களாகக் கடுமையான உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு இருத்தல் (அரசு மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழின் மூலம் அதை நிரூபிக்க வேண்டும்).

3. மேற்படி 02(I) மற்றும் (II) இன் கீழ் உரிய காசுக் கட்டளை இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்க முடியாதுவிட்டால் அவ்வாறான காசுக் கட்டளைகள் சம்பந்தமான விபரங்கள், சம்பந்தப்பட்ட வழக்கு இலக்கங்கள் போன்றவற்றுடன் காசுக்கட்டளைச் சேவைக் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

1A - G 42852 — 07 (2024/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. இருப்பினும், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் பிற சட்டத் தேவைகளுக்காக நீதிமன்ற உத்தரவுகளால் நிறுத்தி வைக்கப்படும் காசுக்கட்டளை, வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுச் சபை வழக்குகள் தொடர்பாக நிறுத்தி வைக்கப்படும் காசுக்கட்டளை, திணைக்கள மற்றும் அமைச்சுக்கள் மட்டத்தில் நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகளின் அடிப்படையிலான காசுக் கட்டளை ஆகியன இதன் மூலம் உள்ளடக்கப்படாது.

5. 2021.01.01 ஆந் திகதி முதல் 2021.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட காசுக் கட்டளைகள் தொடர்பாக, இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் தினம் வரை பெறப்பட்ட முறைப்பாடுகள் மட்டுமே கவனத்திற் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இது சாதாரண காசுக் கட்டளை, இலத்திரனியல் காசுக் கட்டளை, பெக்ஸ் காசுக் கட்டளை மற்றும் பெறுமதி செலுத்தி பாரம் எடுக்கும் காசுக் கட்டளைகளுக்கும் பொருந்தும். மேலே உள்ள 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் உள்ள காசுக் கட்டளைகளின் பெறுமதி அரச வருவாயில் வரவு வைக்கப்பட்டிருந்தால், உரிய காசுக் கட்டளைகளின் பெறுமதியானது நிதி ஒழுங்கு விதிமுறைகளின்படி வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துவதாகக் கருதப்பட்டு தொடர்புடைய தரப்பினருக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. எனவே, மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டபடி காசுக் கட்டளைகளுக்கு பணம் மீளச் செலுத்துவது சம்பந்தமாகக் கவனத்திற் கொள்வதற்கு எழுத்து மூலம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மற்றும் உரிய காசுக் கட்டளையுடன் காசுக் கட்டளை சேவைக் கட்டுப்பாட்டாளருக்கு பின்வரும் முகவரிக்கு இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்க வேண்டும் என ஒவ்வொரு மாகாணத்திற்கும் உரிய உள்ளூராட்சி நிறுவனங்கள், வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சபை, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள், அரசு நிறுவனங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அந்தந்த பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கட்டுப்பாட்டாளர் (காசுக் கட்டளைச் சேவை),
காசுக் கட்டளைச் சேவைப் பிரிவு,
பிரதி அஞ்சல் அதிபதி (மத்திய) அலுவலகம்,
அஞ்சல் தொகுதி,
அஞ்சல் திணைக்களம்,
கண்டி.

7. மேலும், 2021.01.01 ஆந் திகதி முதல் 2021.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் வழங்கப்பட்ட இந்த அறிவித்தலில் இரண்டாவது பந்தியில் காணப்படும் நான்கு விடயங்கள் தொடர்பான காலாவதியான காசுக் கட்டளைகளுக்கு பணத்தைத் திரும்பச் செலுத்துமாறும் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும், அந்தப் பணம் திரும்பச் செலுத்தப்பட மாட்டாது என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

8. 2021.01.01 ஆந் திகதிக்கு முன் வழங்கப்பட்ட எந்தக் காசுக் கட்டளைகளுக்கும் எக்காரணம் கொண்டும் பணம் திரும்பச் செலுத்தப்பட மாட்டாது.

**விஜித ஹேரத்** (பா. உ.),
புத்த சாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள்,
தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும்
வெகுசன ஊடக அமைச்சர்.

கொழும்பு,
2024, ஒற்றோபர் 01.

EOG 10-0085

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.